**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**நாள்: 04.07.2024 நேரம் : மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

தீவிரவாதத்தை அதன் எந்தவொரு வடிவத்திலும் நியாயப்படுத்தவோ, மன்னிக்கவோ இயலாது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஆடவர் 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில் வெற்றி பெற்ற இந்திய அணியினரை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, புதுடெல்லியில் உள்ள தமது இல்லத்தில் சந்தித்து பாராட்டினார்.

தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின் இன்று, மாநில அரசின் நீங்கள் நலமா திட்டப் பயனாளிகளை, காணொலிக் காட்சி மூலம் தொடர்பு கொண்டு, பயனாளிகளின் கருத்துக்களை கேட்டறிந்தார்.

புதுச்சேரி சாலை போக்குவரத்துக் கழகத்தில், ஒப்பந்த ஓட்டுனர்கள் மற்றும் ஒப்பந்த நடத்துனர்களின் மாத ஊதியத்தை உயர்த்த, முதலமைச்சர் திரு. ரங்கசாமி உத்தரவிட்டுள்ளார்.

------------------------------

மோடி-தீவிரவாதம் (12)

தீவிரவாதத்ததை அதன் எந்தவொரு வடிவத்திலும் நியாயப்படுத்தவோ, மன்னிக்கவோ இயலாது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். தீவிரவாதிகளுக்கு ஆதரவு மற்றும் புகலிடம் அளிக்கும் நாடுகளை, சர்வதேச

சமூகத்தினர் தனிமையாக்கி, அம்பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார். கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் நடைபெறும், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில், வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரால் வாசிக்கப்பட்ட பிரதமரின் உரையில், இக்கருத்துக்கள் வெளியாகி உள்ளன. எல்லை தாண்டிய பயங்கரவாதத்தையும், தீவிரவாதிகளுக்கான நிதி ஆதரவு, மற்றும், ஆள் சேர்ப்பு ஆதரவையும் தடுக்க தீர்மானகரமான நடவடிக்கைகள் தேவைப் படுவதாக பிரதமர் கூறினார். இளைஞர்கள் மனதில் தீவிரவாத எண்ணங்களை விதைக்கும் போக்கை, வருமுன் காத்தல் அடிப்படையில் தடுக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

------------------------------

*சேர்க்கை (5)*

முன்னதாக அஸ்தானாவில், சீன வெளியுறவு அமைச்சர் திரு. வாங் யி-யை, டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்து, இருநாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சனைகள் குறித்து பேசினார். எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டிற்கு அரசியல் மற்றும் ராணுவ தரப்பு மூலம், பிரச்சனைக்கு தீர்வு காண இருதரப்புகளும் ஒப்புக்கொண்டன.

------------------------------

*ராஜ்நாத்* (13)

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், ஆஸ்திரேலிய துணை பிரதமரும், அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சருமான திரு. ரிச்சர்டு மார்லஸ்-

சுடன், இன்று தொலைபேசியில் உரையாடினார். இந்தோ-பசிபிக் பிராந்தியம் உட்பட, இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான பல்வேறு முக்கிய பிரச்சனைகள் குறித்து, இதில் மறு ஆய்வு செய்யப் பட்டதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். இருதரப்பு பாதுகாப்பு உறவுகளில், புரட்சிகரமான முன்னேற்றம் ஏற்பட்டு வருவதை இரு அமைச்சர்களும் சுட்டிக் காட்டினர். இந்தியாவிற்கும்-ஆஸ்திரேலியாவிற்கும் இடையே, கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற, அமைச்சர்கள் நிலையிலான, டூ–ப்ளஸ்-டூ கூட்டத்திற்கு பின்னர் இருதரப்பு உறவுகளில் வேகம் அதிகரித்து இருப்பதை இவர்கள் பாராட்டினர். பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பங்கேற்புடன் கூடிய இந்திய ஜனநாயகக் கட்டமைப்பின் செயல்பாடுகளை ஆஸ்திரேலிய அமைச்சர் பாராட்டினார்.

-----------------------------

பசுமை இயக்கம் (11)

தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்திற்கான தர நிலைகள், மற்றும், ஒழுங்குமுறை விதிகளை உருவாக்கத் தேவையான கட்டமைப்பு மற்றும் பரிசோதனை வசதிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு இன்று வெளியிட்டுள்ளது. 2025-26ஆம் நிதியாண்டு வரை, மொத்தம் 200 கோடி ரூபாய் பட்ஜெட் ஆதரவுடன், இந்த வசதிகள் உருவாக்கப்படும் என்று, புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறைக்கான மத்திய அமைச்சகம் தெரிவித்துள்ளது. தூய எரிசக்தி மூலம், சுயசார்பு நாடாக இந்தியாவை உயர்த்தும் நோக்கிலான மத்திய அரசின்

தேசிய பசுமை இயக்கம், கடந்த ஆண்டு ஜனவரி 4ஆம் தேதி தொடக்கப்பட்டதும், 2029-30ஆம் ஆண்டு வரை, மொத்தம் 19 ஆயிரத்து 700 கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில் இந்த இயக்கம் அமலாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

-------------------------------

*நிதி ஆயோக் (15)*

நாடு முழுவதும், வளர்ச்சி ஆர்வம் அதிகம் உள்ள 112 மாவட்டங்களில், விவசாயிகளுக்கு வழங்கப்படும் மண்வள அட்டைகளின் எண்ணிக்கை உட்பட 6 முக்கிய குறியீடுகளையும், வளர்ச்சி ஆர்வம் அதிகம் உள்ள 500 வட்டங்களில், சர்க்கரை நோய்க்கு பரிசோதனை செய்து கொள்வோர் எண்ணிக்கை உட்பட 6 முக்கிய குறியீடுகளையும் 100 சதவிகித அளவில், மேம்படுத்தும் வகையில், சம்பூர்ணதா இயக்கம் என்னும் 3 மாதகால இயக்கத்தை, நிதி ஆயோக் இன்று முதல் தொடக்கியுள்ளது. வளர்ச்சி ஆர்வம் அதிகம் உள்ள வட்டங்களுக்கான முக்கிய குறியீடுகளில், கருவுற்ற 3 மாதங்களுக் குள்ளாகவே கர்ப்பகால பரிசோதனைகளுக்கு பதிவு பெறும் பெண்களின் எண்ணிக்கை, சுழல் நிதியில் இருந்து, நிதி உதவி பெறும் சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை ஆகிய குறியீடுகளும் அடங்கும். வளர்ச்சி ஆர்வம் அதிகம் உள்ள மாவட்டங்களுக்கான முக்கிய குறியீடுகள் பட்டியலில், முற்றிலுமாக தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை, கல்வியாண்டின் முதல் மாதத்திலேயே குழந்தைகளுக்கு பாடப்

புத்தகம் வழங்கும் பள்ளிகளின் எண்ணிக்கை உள்ளிட்ட குறியீடுகளும் இடம்பெற்றுள்ளன.

------------------------------

*ஸ்மார்ட் நகரம்* (7)

ஸ்மார்ட் சிட்டி இயக்கத்தின் கீழ், நாடு முழுவதும் 100 நகரங்களில், 1.6 லட்சம் கோடி ரூபாய் மதிப்பில் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டமைப்பு திட்டங்களை நிறைவேற்றும் பணிகளில், இதுவரை 90 சதவிகித பணிகள் முடிந்து விட்டதாக, மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. எஞ்சியுள்ள 10 சதவிகித பணிகளையும் நிறைவேற்றி முடிக்க ஏதுவாக, மத்திய அரசு ஸ்மார்ட் நகர இயக்கத்தை, அடுத்த ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை நீட்டித்துள்ளது.

------------------------------

*தன்கர்* (8)

குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், வரும் சனிக் கிழமை முதல் கேரளத்தில் 2 நாள் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். திருவனந்தபுரத்தில் உள்ள இந்திய விண்வெளி அறிவியல் தொழில்நுட்பக் கழகத்தின் 12ஆவது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக, அன்றைய தினம் அவர் கலந்து கொள்கிறார். படிப்பு முடித்த மாணவர்களுக்கு பட்டங்களையும், சிறந்த மாணவர்களுக்கு பதக்கங்களையும் அவர் வழங்குகிறார். மறுநாள் 7ஆம் தேதி, கொல்லம் மற்றும் அஷ்டமுடி கடற்கழிக்கும் அவர் செல்ல இருக்கிறார்.

------------------------------

*கிரிக்கெட்-மோடி 1* (16)

ஆடவர் 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில் வெற்றி பெற்ற இந்திய அணியினரை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, புதுடெல்லியில் உள்ள தமது இல்லத்தில் சந்தித்தார். இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் ரோஹித் ஷர்மா, பயிற்சியாளர் ராகுல் டிராவிட் மற்றும் வீராட் கோலி, ஹர்திக் பாண்டியா, ஜஸ்ப்ரீத் பும்ரா உள்ளிட்ட கிரிக்கெட் வீரர்களும், இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். கிரிக்கெட் அணியினருடன் பிரதமர் கலந்துரையாடினார். கிரிக்கெட் வீரர்கள் தங்களின் அனுபவங்களை பிரதமருடன் பகிர்ந்து கொண்டனர். முன்னதாக, பார்படோசில் இருந்து வெற்றிக் கோப்பையுடன் இன்று காலை புதுடெல்லி திரும்பிய இந்திய கிரிக்கெட் அணியினருக்கு உற்சாக வரவேற்று அளிக்கப் பட்டது. விமான நிலையத்தில் பெரும் எண்ணிக்கையில் கிரிக்கெட் ரசிகர்கள் திரண்டு, ஆட்டம் -பாட்டத்துடன் கிரிக்கெட் அணியினரை வரவேற்றனர். கொண்டாட்டங்களில், கிரிக்கெட் அணியினரும் கலந்து கொண்டதால், உற்சாகம் கரை புரண்டு ஓடியது. கிரிக்கெட் அணியினர் பிரதமரை சந்தித்த பின்னர், டெல்லியில் இருந்து விமானத்தில் மும்பை சென்று, திறந்தநிலை பேருந்தில், வெற்றிப் பேரணி நடத்துகிறார்கள்.

*கிரிக்கெட்-மோடி* 2 (5)

இப்பேரணியை தொடர்ந்து, மும்பை வாண்கடே விளையாட்டு அரங்கில் நடைபெறும் பாராட்டு விழாவிலும் கிரிக்கெட் அணியினர் பங்கேற்கிறார்கள். மும்பையில் கிரிக்கெட் அணியினரின் வெற்றிப் பேரணி

மற்றும் பாராட்டு விழாவை ஒட்டி, விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. போக்குவரத்து மாற்றங்களும் அறிவிக்கப் பட்டுள்ளன.

------------------------------

*ஸ்டாலின்* (13)

தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின் இன்று, மாநில அரசின் நீங்கள் நலமா திட்டப் பயனாளிகளை, காணொலிக் காட்சி மூலம் தொடர்பு கொண்டு, பயனாளிகளின் கருத்துக்களை கேட்டறிந்தார். அரசின் பல்வேறு நலத் திட்டங்களால் பயன் பெற்ற பயனாளிகளும், இக்கூட்டத்தில் பின்னூட்டம் அளித்தனர். இதற்கிடையே, ஊரகப் பகுதிகளுக்கான தமிழக அரசின் மக்களுடன் முதல்வர் திட்டத்தை, வரும் 11 ஆம் தேதி தர்மபுரியில், திரு. முக. ஸ்டாலின் தொடக்கி வைக்கிறார். தர்மபுரியில் இதற்கான விழா நடைபெறும் இடத்தை, மாநில வேளாண் அமைச்சர் திரு. எம்ஆர்கே பன்னீர்செல்வம் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றி முடிக்கப் பட்டுள்ள பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின் தொடக்கி வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவார் என்றும், விழாவின் போது 2 ஆயிரம் பயனாளிகளுக்கு, நலத் திட்ட உதவிகள் வழங்கப்படும் என்றும், திரு. எம்ஆர்கே பன்னீர் செல்வம் தெரிவித்தார்.

------------------------------

*பிஆர்டிசி-ரங்கசாமி* (11)

புதுச்சேரி சாலை போக்குவரத்துக் கழகத்தில், ஒப்பந்த ஓட்டுனர்களின் மாத ஊதியத்தை, 10 ஆயிரத்த 804 ரூபாயில் இருந்து, 16 ஆயிரத்து 796 ரூபாயாகவும், ஒப்பந்த நடத்துனர்களின் மாத ஊதியத்தை, 10 ஆயிரத்து 656 ரூபாயில் இருந்து, 16 ஆயிரத்து 585 ரூபாயாகவும் உயர்த்த முதலமைச்சர் திரு. ரங்காசமி உத்தரவிட்டுள்ளார். இதற்கான ஆணையை முதலமைச்சர் இன்று, சாலை போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர் சிவக்குமாரிடம் வழங்கினார். சட்டமன்றத்தில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், பிஆர்டிசி பொது மேலாளர் திரு. கலியபெருமாள் ஆகியோர் உடன் இருந்தனர். ஒப்பந்த ஓட்டுனர்கள் மற்றும் நடத்துனர்களின் ஊதிய உயர்வு இவ்வாண்டு ஜூன் மாதம் முதல் அமலுக்கு வருவதாகவும், முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

------------------------------

*புதுச்சேரி-கூட்டம்* (11)

நாட்டில், அவசரகால மருத்துவ வசதிகளை மேம்படுத்துவதற்கான, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் India-EMS திட்டம் தொடர்பான, முதலாவது மாநில நிலை ஆய்வு கூட்டம் புதுச்சேரியில் நாளை நடைபெற உள்ளது. கதிர்காமம் இந்திராகாந்தி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் அரசுக் கொறடா திரு. ஏ.கே.டி ஆறுமுகம்,

சட்டமன்ற உறுப்பினர் திரு. கேஎஸ்பி ரமேஷ், சுகாதாரத் துறைச் செயலர் திரு. எம். ராஜூ, சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ஸ்ரீராமுலு உள்ளிட்டோர் கலந்து கொள்கிறார்கள். புதுடெல்லி ஐசிஎம்ஆர் விஞ்ஞானி டாக்டர் மீனாட்சி ஷர்மா, India-EMS திட்டம் குறித்து, இக்கூட்டத்தில் அறிமுக உரை நிகழ்த்துவார் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

------------------------------

விக்ரவாண்டி (6)

தமிழகத்தில், விழுப்புரம் மாவட்டம் விக்ரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் வரும் 10ஆம் தேதி நடைபெற உள்ளதை ஒட்டி, அரசியல் கட்சி தலைவர்கள் அத்தொகுதியில், தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். வாக்குப்பதிவு முடிவதற்கு 48 மணி நேரம் முன்பாக, கருத்துக் கணிப்புகள் மற்றும் இதர தேர்தல் ஆய்வு முடிவுகளை வெளியிடக் கூடாது என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

------------------------------

வானிலை (11)

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் நீலகிரி மற்றும் கோவை மாவட்ட மலைப் பகுதிகளில், ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மன்னார் வளைகுடா, தென்தமிழக

கடலோரம் மற்றும் வங்கக் கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக் காற்று வீசக் கூடும் என்பதால், மீனவர்கள் அடுத்த 4 நாட்களுக்கு இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, சென்னை சோலிங்கநல்லூர் மண்டலத்தில், 9 செ.மீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரி திருக்கனூரில், 3 செ.மீ மழை பெய்துள்ளது.

------------------------------

*யுபிஐ (8)*

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள் மற்றும் அந்நாட்டிற்கு செல்லும் இந்திய பயணிகள், யுபிஐ பணப் பரிமாற்ற வசதியை பயன்படுத்த ஏதுவாக, தேசிய பணப் பட்டுவாடா கழகத்தின் சர்வதேச பிரிவு, முன்னணி டிஜிட்டல் வர்த்தக நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இதன்மூலம் ஐக்கிய அரபு அமீரகத்தில், சில்லரை விற்பனை நிலையங்கள் உட்பட, சுமார் 2 லட்சம் வர்த்தக நிறுவனங்களில், QR Code மூலம், யுபிஐ பணப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள முடியும் என சமபந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

------------------------------

*பிரிட்டன் தேர்தல் (6)*

இங்கிலாந்தில், புதிய பிரதமரை தேர்ந்தெடுப்பதற்கான நாடாளுமன்றத் தேர்தல் இன்று நடைபெற்று வருகிறது. இந்திய நேரப்படி இன்று பிற்பகல் பனிரெண்டரை மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு, நாளை அதிகாலை

மூன்றரை மணி வரை நடைபெறும். இத்தேர்தலில், நடப்பு பிரதமர் திரு. ரிஷி சுனக்-கின் கன்சர்வேட்டிவ் கட்சியும், எதிர்கட்சியான தொழிலாளர் கட்சியும், போட்டிக் களத்தில் உள்ளன.

------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

தீவிரவாதத்தை அதன் எந்தவொரு வடிவத்திலும் நியாயப்படுத்தவோ, மன்னிக்கவோ இயலாது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஆடவர் 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில் வெற்றி பெற்ற இந்திய அணியினரை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, புதுடெல்லியில் உள்ள தமது இல்லத்தில் சந்தித்து பாராட்டினார்.

தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின் இன்று, மாநில அரசின் நீங்கள் நலமா திட்டப் பயனாளிகளை, காணொலிக் காட்சி மூலம் தொடர்பு கொண்டு, பயனாளிகளின் கருத்துக்களை கேட்டறிந்தார்.

புதுச்சேரி சாலை போக்குவரத்துக் கழகத்தில், ஒப்பந்த ஓட்டுனர்கள் மற்றும் ஒப்பந்த நடத்துனர்களின் மாத ஊதியத்தை உயர்த்த, முதலமைச்சர் திரு. ரங்கசாமி உத்தரவிட்டுள்ளார்.